V12Acc

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

வகுப்பு 12

கால அளவு: 1.30 மணிநேரம் **கணக்குப் பதிவியல்** மதிப்பெண்கள்: 50

**பகுதி - அ**

**குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும்.** **10×1=10**

**2) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதவும்.**

1) நிறுமம் அலைப்பின் போது மட்டும் அழைக்கபடகூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்

அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல்

இ) முதலின காப்பு ஈ) காப்பு முதல்

2) நிதி என்னும் சொல் குறிப்பிடுவது

அ) நடப்பு பொறுப்பு ஆ) நடைமுறை முதல்

இ) நிலைச் சொத்து ஈ) நீண்ட கால சொத்துக்கள்

3) நடப்பு விகிதம் காட்டுவது

அ) குறுகிய கால கடன் தீர்க்கும் திறன் ஆ) மேலாண்மை திறன்

இ) இலாபம் ஈட்டும் திறன் ஈ) நீண்ட கால கடன் தீர்க்கும் திறன்

4) நடப்பு பொறுப்பு ரூ.40,000 நடப்பு சொத்து ரூ.1,00,000 சரக்கிருப்பு ரூ.20,000 எனில் விரைவு விகிதம்

அ) 1 : 1 ஆ) 2 : 5 : 1 இ) 2 : 1 ஈ) 1 : 2

5) விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை ரூ.3,00,000 அவ்வாண்டின் தொடக்க சரக்கிருப்பு ரூ.60,000 அவ்வாண்டின் இறுதி சரக்கிருப்பு ரூ.40,000 எனில் சரக்கிருப்பு சுழற்சி விகிதம்

அ) 2 மடங்கு ஆ) 3 மடங்கு இ) 6 மடங்கு ஈ) 8 மடங்கு

6) ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை 125000 லிருந்து ரூ.150000க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது?

அ) +20% ஆ) + 120% இ) – 120% ஈ) – 20%

7) ஒரு வணிகத்தின் முதலாமாண்டு செலவுகள் ரூ.80000 இரண்டாமாண்டு செலவுகள் ரூ.88000 ஆக அதிகரித்துள்ளது. இரண்டாமாண்டின் போக்குவிகிதம் என்ன?

அ) 10% ஆ) 110% இ) 90% ஈ) 11%

8) ரூ.8 செலுத்தப்பட்ட ரூ.10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில் அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை

அ) பங்கொன்றுக்கு ரூ.10 ஆ) பங்கொன்றுக்கு ரூ.8

இ) பங்கொன்றுக்கு ரூ.5 ஈ) பங்கொன்றுக்கு ரூ.2

9) சரியான குறியீட்டை பயன்படுத்தி பொருத்தமான இணையை தேர்ந்தெடுக்கவும்.

A) குறை ஒப்பம் - i) முன்கூட்டி செலுத்திய அழைப்புபணம்

B) மிகை ஒப்பம் - ii) வெளியிட்ட பங்குகளைவிட அதிகமாக ஒப்பபட்டது

C) அழைப்பு நிலுவை - iii) வெளியிட்ட பங்குகளை விட குறைவாக ஒப்பபட்டது.

D) அழைப்பு முன் பணம் - v) செலுத்த பெறாத அழைப்பு பணம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| அ) | (i) | (ii) | (iii) | (iv) |
| ஆ) | (iv) | (iii) | (ii) | (i) |
| இ) | (iii) | (ii) | (iv) | (i) |
| ஈ) | (iii) | (iv) | (i) | (ii) |

10) சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும் போது வரவு வைக்கப்படும் கணக்கு

அ) சொத்து க/கு ஆ) பொறுப்பு க/கு இ) பங்குமுதல் க/கு ஈ) வங்கி க/கு

**பகுதி - ஆ**

**எவையேனும் ஐந்திற்கு விடையளி.** **5×2=10**

**வினா எண் 18க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

11) மிகை ஒப்பம் என்றால் என்ன?

12) நடைமுறை முதல் என்றால் என்ன?

www.Padasalai.Net

13) பங்கு என்றால் என்ன?

14) நிதிநிலை பகுப்பாய்வின் கருவிகளை பட்டியலிடவும்.

15) புற அக பொறுப்பு விகிதம் என்றால் என்ன?

16) சாரா நிறுமம் பங்கொன்றுக்கு ரூ.10 வீதம் 10,000 நேர்மை பங்குகளை விண்ணப்பத்தின்போது முழு தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. பின்வரும் நிலையில் குறிப்பேட்டு பதிவு தரவும்.
(1) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

17) பின்வரும் தகவல்களிலிருந்து நடப்பு விகிதத்தை கணக்கிடவும். குறுகிய கால முதலீடுகள் ரூ.20,000 வணிகத்தின் கடனாளிகள் ரூ.60,000 வணிக கடனீந்தோர் ரூ.40,000

18) விடுபட்ட விவரங்களை நிறைவு செய்யவும்.

| நாள் | விவரம் | | பே ப எ | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | ...................................... க/கு<br>பங்கு விண்ணப்ப க/கு<br>பங்கு ஒன்று ரூ.2 வீதம்<br>விண்ணப்பதொகை பெற்றது | ப<br>வ | | 2,00,000 | <br>......... |
| 2 | பங்கு விண்ணப்ப க/கு<br>பங்கு முதல் க/கு<br>பங்கு விண்ணப்ப தொகை ..........<br>பங்குகளுக்கான ........ மாற்றபட்டது | ப<br>வ | | | ........<br>2,00,000 |

## பகுதி - இ

**எவையேனும் ஐந்திற்கு மட்டும் விடையளி.** **5×3=15**
**வினா எண் 26க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

19) விகித பகுப்பாய்வின் குறைபாடுகள் யாவை?

20) குறிப்பு வரைக. (1) அங்கீகரிக்கபட்ட முதல் (2) காப்பு முதல்

21) இயக்க இலாபம் எவ்வாறு கண்டறியப்படுகிறது?

22) ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகள் யாவை?

23) ரொக்க ஓட்ட பகுப்பாய்வு என்றால் என்ன?

24) குமார் நிறுமத்தின் 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளின் பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்க.

| விவரம் | 2017-18 ரூ. |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 |
| இதரவருமானம் ............. | 20,000 |
| செலவுகள் | 3,00,000 |

25) கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆனந்த் கட்டுமான நிறுமத்தின் தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தை கணக்கிடவும். நடப்பு சொத்துகள் ரூ.25,000 நடப்பு பொறுப்புகள் ரூ.1,00,000 சரக்கிருப்பு ரூ.50,000 முன் கூட்டி செலுத்திய செலவுகள் 15000

26) அனிதா என்பவர் ரூ.10 மதிப்புள்ள 500 நேர்மை பங்குகளை வைத்துள்ளார். அவர் விண்ணப்பத்தின் போது ரூ.3 ஒதுக்கீட்டின் போது ரூ.5 செலுத்தி உள்ளார். முதல் மற்றும் இறுதி அழைப்பு தொகை ரூ.2 செலுத்தவில்லை. அழைப்பு தொகை செலுத்தாததால் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு குறிப்பேட்டு பதிவு தருக.

## பகுதி - ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3×5=15**

27) அ) விஸ்வநாத் அறைகலன் வரையறு நிறுமம் ஒன்று ரூ.10 வீதம் 20000 பங்குகளை பங்கொன்றுக்கு ரூ.2 முனைமத்தில் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ.2 ஒதுக்கீட்டின் போது ரூ.5 (முனைமம் உள்பட) முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.5 மிகை ஒப்பமாக 30,000 பங்குகளுக்கான விண்ணப்பம் பெறப்பட்டன.

www.Padasalai.Net

கூடுதலாக பெறபட்ட விண்ணப்பம் நிராகரிக்கபட்டன அனைத்து தொகையும் பெறபட்டது குறிப்பேட்டு பதிவு தருக.

**(அல்லது)**

ஆ) சரக்கிருப்பு மாற்று காலம் என்றால் என்ன? இது எவ்வாறு கணக்கிடபடுகிறது.

28) அ) டெரிக்ஸ்டன் நிறுமத்தின் பின்வரும் இலாபநட்ட அறிக்கையிலிருந்து (1) மொத்த இலாபவிகிதம் (2) நிகர இலாப விகிதம் கணக்கிடவும்.

**டெரிக்ஸ்டன் நிறுமத்தின் இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | ரூ. |
|---|---|
| (i) விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 24,00,000 |
| (ii) இதர வருமானம் | |
| முதலீடுகளிலிருந்து பெற்ற வருவாய் | 70,000 |
| (iii)மொத்த வருவாய் | 24,70,000 |
| (iv) செலவுகள் | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 18,80,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | (–) 80,000 |
| பணியாளர் நலனுக்கான செலவு | 2,90,000 |
| இதர செலவுகள் | 1,10,000 |
| வரி ஒதுக்கு | 30,000 |
| மொத்த செலவு | 22,30,000 |
| இலாபம் | 2,40,000 |

**(அல்லது)**

ஆ) முன்னுரிமை பங்குக்கும் நேர்மை பங்குக்கும் உள்ள வேறுபாடு யாது?

29) அ) சந்திரா நிறுமத்தின் இருப்பு நிலை குறிப்பிலிருந்து 2016 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகுறிய ஒப்பீட்டு இருப்புநிலை குறிப்பினை தயார் செய்யவும்.

| விவரம் | 2016-மார்ச் 31 ரூ. | 2017 மார்ச் 31 ரூ. |
|---|---|---|
| (i) பங்கு மூல தனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி ............. | 1,00,000 | 2,60,000 |
| நீண்ட கால பொறுப்புகள் ......... | 50,000 | 60,000 |
| நடப்பு பொறுப்பு ............. | 25,000 | 30,000 |
| | 1,75,000 | 3,50,000 |
| (ii) சொத்துகள் | | |
| நிலை சொத்துகள் | 1,00,000 | 2,00,000 |
| நடப்பு சொத்து | 75,000 | 1,50,000 |
| மொத்தம் | 1,75,000 | 3,50,000 |

**(அல்லது)**

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து கலா நிறுமத்தின் போக்கு சதவீதங்களை கணக்கிடுக.

| விவரம் | ரூ. ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | 2015-16 | 2016-17 | 2017-18 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 400 | 500 | 600 |
| இதர வருமானம் | 100 | 150 | 200 |
| செலவுகள் | 200 | 290 | 350 |

------